செ. கு. எண்: 073 நாள் :19.08.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

# அறிக்கை – 19.8.2015

மேட்டூர் அணையிலிருந்து புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்களின் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடும்படி, திருச்சி, அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களின் வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, **மேட்டூர் அணையிலிருந்து** புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்களின் பாசனத்திற்காக **20.8.2015 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திருச்சி, அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் **42,736 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும்;

மேட்டூர் அணையிலிருந்து மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்குக் கரை கால்வாய் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடும்படி, சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **மேட்டூர் அணையிலிருந்து** மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்குக் கரை கால்வாய்களில் பாசனத்திற்காக **20.8.2015 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், ஈரோடு சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் **45,000 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**